## 'மகளிர் விடியல் பயணம்' திட்டம் பெயர் மாற்றம்!

# தமிழ்நாட்டை இருண்ட காலத்திற்கு கொண்டு செல்லும் த.வெ.க. அரசு!

### முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் கடும் கண்டனம் !

தூத்துக்குடி, ஜூலை 11 -

முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. அரசு கொண்டு வந்த 'மகளிர் விடியல் பயணம்' திட்டத்தை 'மகளிர் பயணம்' எனப் பெயர் மாற்றியிருக்கிறது த.வெ.க. அரசு.

அ.தி.மு.க.வின் 10 ஆண்டுகால ஆட்சியால் இருண்டு கிடந்த தமிழ்நாட்டுக்கு விடியலை கொடுத்தது நமது தி.மு.க. அரசு.



தற்போதைய த.வெ.க. அரசு, மீண்டும் தமிழ்நாட்டை இருண்ட காலமாக மாற்றப் போவதால் 'விடியல்' என்ற சொல்லை அவர்களாகவே நீக்கியிருக்கிறார்கள் போல..! மகளிர் விடியல் பயணத்தில் விடியலை தூக்கியவர்கள், வரும் நாட்களில் மகளிர் பயணம்' என்ற சொற்களையும் தூக்கிவிட்டு இத்திட்டத்தையே நிறுத்திவிடுவார்களோ என்ற அச்சம் பெண்களிடையே மேலோங்குகிறது.

மாற்றம் என்று த.வெ.க.வினர் கூறியது பெயர் மாற்றம்தான் போல!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் கூறியுள்ளார்.

## நெல்லை 'சிப்காட்'டில் – தி.மு.க. ஆட்சியில் உறுதி செய்து அடிக்கல் நாட்டப்பட்ட

# 'விக்ரம் சோலார்' முதலீட்டுத் திட்டத்தை - 'ரீல்ஸ் அரசு' தனது புதிய திட்டம் போல் பொய் விளம்பரம்!

### சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம்!

சென்னை, ஜூலை 11 -

நெல்லை கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் முதலீடு உறுதி செய்து அடிக்கல் நாட்டப்பட்ட நிறுவனம் விக்ரம் சோலார்.

அதே நிறுவனத்தின் முதலீட்டு திட்டத்தையே த.வெ.க. அரசு புதிய முதலீடாக மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்தியுள்ளது. மேலும் ரூ.15,037 கோடி முதலீடு உடனே தமிழ்நாடு வருவதாக பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். கடந்த 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு நிதி கழகமான டி.எப்.சி. (DFC) மூலம் சுமார் 200 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி பெற்று, திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் உற்பத்தி ஆலை அமைக்க விக்ரம் சோலார் நிறுவனம் ஒப்பந்தம் செய்தது.

அதன்பிறகு, 2025 பிப். 5ம் தேதி, ரூ.3,800 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்ட டாடா குழுமத்தின் சோலார் உற்பத்தி ஆலையை அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

அதே நிகழ்வில் ரூ.3,125 கோடி முதலீட்டில் விக்ரம் சோலார் நிறுவனத்தின் தொழிற்சாலைக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 6,500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், நேற்று சென்னை தலைமை செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில், திருநெல்வேலி கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் ரூ.15,037 கோடி முதலீட்டில் விக்ரம் சோலார் நிறுவனம் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் உற்பத்தி ஆலையை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது.

த.வெ.க. அரசின் இந்த அறிவிப்பை பார்த்தால், ரூ.15,037 கோடி முதலீடு உடனடியாக தமிழகம் வரப்போகிறது என்ற தோற்றம் உருவாகிறது. ஆனால், தொழில்துறை வட்டாரங்களில் அதற்கு மாறாக பேசப்படுகிறது. விக்ரம் சோலார் நிறுவனத்தின் முதலீடு ஒரே கட்டமாக நடைபெறவில்லை. பல ஆண்டுகளாக பல கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, 2026ம் ஆண்டில் ரூ.800 கோடி, 2027ம் ஆண்டில் ரூ.1,200 கோடி, 2028ம் ஆண்டில் ரூ.1,300 கோடி, 2029ம் ஆண்டில் ரூ.1,071 கோடி என ஆரம்ப கட்டங்களில் மொத்தம் ரூ.4,371 கோடி அளவிலான முதலீடு மட்டுமே திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்பிறகு ஒவ்வொரு கட்ட முதலீடும் நிறுவனத்தின் பணப்புழக்கம், சந்தை மதிப்பு உள்ளிட்ட காரணிகளைப் பொறுத்தே முன்னேறும்.

அதாவது, ரூ.15,037 கோடி என்பது உடனடியாக வரவிருக்கும் முதலீடு அல்ல. நீண்டகால இலக்கு முதலீட்டு மதிப்பாக இருக்கலாம் என கூறப்படுகிறது. அதேபோல், விக்ரம் சோலார் நிறுவனத்தின் சந்தை மதிப்பு சுமார் ரூ.7,000 கோடி இருக்கும் நிலையில், ரூ.15,037 கோடி முதலீடு எவ்வாறு சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதுகுறித்து தொழில் துறை நிபுணர்கள் கூறுகையில், "ஒரு நிறுவனத்தின் சந்தை மதிப்பை விட அதிக மதிப்புள்ள திட்டங்களை மேற்கொள்வது இயலாதது. வங்கி கடன், வெளிநாட்டு முதலீடு, பங்குதாரர் முதலீடு, திட்ட நிதியுதவி, கூட்டாண்மை முதலீடு போன்ற பல்வேறு வழிகளில் நிறுவனங்கள் பெரிய முதலீடு களை மேற்கொள்வது உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது.

எனினும், இந்த திட்டத்திற்கு நிதி எங்கிருந்து வர உள்ளது. எந்த ஆண்டில் எவ்வளவு முதலீடு செய்யப்படும். முழு திட்ட கால அட்டவணை என்ன என்பன குறித்து அரசு வெளிப்படையாக விளக்கம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது" என்றனர்.

## பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் தேடல் குழுவில் யூ.ஜி.சி. உறுப்பினரைச் சேர்க்கும் –

# மாநில ஆட்சியாளர்கள் தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்க!

### மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் அறிக்கை!

சென்னை, ஜூலை 11 -

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் தேடல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) உறுப்பினரைச் சேர்ப்பது, மாநில உரிமைகளுக்கு எதிரானது எனவும், மாநில ஆட்சியாளர்கள் தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

மாநிலப் பல்கலைக்கழகங்கள் அந்தந்த மாநிலச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டு, அவற்றின் நிருவாகம், துணைவேந்தர் நியமனம் உள்ளிட்ட அனைத்து நடைமுறைகளும் அந்தச் சட்டங்களின் படியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இந்நிலையில், துணைவேந்தர் தேடல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழு உறுப்பினரைச் சேர்ப்பதற்கு மாநில அரசு இசைவு தெரிவித்திருப்பது உடனடியாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

#### சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பை மாற்ற முடியாது!

மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் தேடல் குழுவின் அமைப்பு அந்தந்த பல்கலைக் கழகச் சட்டங்களில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பை மாற்ற வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட சட்டத்தில், சட்டமன்றத்தின் மூலம் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாக இசைவு அல்லது அரசாணை மூலம் சட்டத்தின் அடிப்படை அமைப்பை மாற்ற இயலாது.

உரிய சட்டத்திருத்தம் செய்யாமல் தேடல் குழுவில் வெளிப்புற ஒழுங்குமுறை அமைப்பின் பிரதிநிதியை கட்டாயமாகச் சேர்ப்பது, பல்கலைக்கழகத் தன்னாட்சியைக் குறைக்கும். இது சட்டமன்றத்தின் அதிகாரத்திற்கு அறைகூவல் விடும் செயலாக அமையும்.

#### மாநில உரிமைகளுக்கு எதிரான செயல்!

இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சிக் கட்டமைப்பின்படி, மாநிலப் பல்கலைக்கழகங்களின் நிருவாகம் மாநில அரசுக்கும் மாநிலச் சட்டங்களுக்கும் உட்பட்டதாகும். இதில் மத்திய அமைப்பின் பிரதிநிதித்துவத்தை கட்டாயப்படுத்துவது மாநில உரிமைகளுக்கு எதிரானதாகும்.

பல்கலைக்கழக மானியக் குழு என்பது உயர்கல்வித் தரநிலைகளை வகுத்து, மானியங்கள் வழங்கி, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை வெளியிடும் அமைப்பாகும். ஆனால் மாநிலப் பல்கலைக் கழகங்களின் நிர்வாக நியமனங்களில் நேரடி உறுப்பினராக இருப்பது அதன் முதன்மைப் பொறுப்பின் எல்லையைத் தேவையின்றி விரிவுபடுத்துவதாகும்.

ஒருபுறம் தரநிலைகளை மதிப்பீடு செய்யும் அமைப்பாகவும், மறுபுறம் துணைவேந்தர் தேர்வில் உறுப்பினராகவும் இருப்பது, அதிகாரக் குவிப்பிற்கும் நலன் முரண்பாட்டிற்கும் வழிவகுக்கும்.

#### ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி நிர்வாக மரபுகள்!

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி பல்கலைக்கழகச் சட்டங்களும் நிர்வாக மரபுகளும் உள்ளன. அனைத்திற்கும் ஒரே மாதிரியான தேடல் குழு அமைப்பை விதிப்பது மாநிலங்களின் தேவைகளுக்கு ஏற்றதாக இருக்காது.

மத்திய அமைப்பின் பிரதிநிதியை நியமிப்பதில் ஏற்படும் தாமதம், துணைவேந்தர் நியமனத்தையும் தாமதப்படுத்தி, பல்கலைக் கழக நிர்வாகத்தில் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

மாநிலச் சட்டத்தில் குறிப்பிடப்படாத உறுப்பினரைத் தேடல் குழுவில் சேர்த்து மேற்கொள்ளப்படும் நியமனங்கள், நீதிமன்றங்களில் சவாலுக்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

#### பல்கலைக்கழக தன்னாட்சியும் பாதிப்பு!

**உயர்கல்வித் தரத்தை உறுதிப்படுத்துவது அவசியமானதே! ஆனால் அதற்காக மாநில அரசின் சட்டப்பூர்வ அதிகாரங்களும் பல்கலைக்கழகத் தன்னாட்சியும் பாதிக்கப்படக் கூடாது. உயர் கல்வித் தரநிலைகளும் மாநில உரிமைகளும் சமநிலையுடன் பாதுகாக்கப்படும் வகையிலான நடைமுறைகளே ஏற்றதாகும்.**

இத்தகைய காரணங்களினால், மாநில பல்கலைக்கழக துணைவேந்தர் தேடல் குழுவில், பல்கலைக்கழக மானியக் குழு உறுப்பினரை நியமிப்பதற்கு இசைவு தரும் போக்கினை தமிழ்நாட்டை ஆள்பவர்கள் உடனடியாகக் கைவிட்டு, மாநில உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என கல்வியாளர்கள் சார்பில் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தெரிவித்துள்ளார்.

## தொடர் மின்வெட்டு - குறைந்த மின்னழுத்தம் - கோடை குறுவை சாகுபடிக்கு

# போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் பாதிப்பு!

### திருவாரூர் மாவட்ட விவசாயிகள் வேதனை!

திருவாரூர், ஜூலை 11 -

திருவாரூர் மாவட்டத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் மின்வெட்டு மற்றும் குறைந்த மின்னழுத்தம் காரணமாக போதிய தண்ணீர் இன்றி தட்டையாகி உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்து உள்ளனர். சரியான நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் காய்வதுடன், குறைந்த மின்னழுத்தத்தால் மோட்டார்கள் அடிக்கடி பழுதாகி விவசாயிகளுக்கு கூடுதல் செலவை ஏற்படுத்தி வருகிறது.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பம்ப் செட் மூலம் கோடை குறுவை நெல் சாகுபடியில் ஈடுபட்டு உள்ளனர். ஏக்கர் ஒன்றுக்கு 35,000 ரூபாய் வரை செலவு செய்துள்ள நிலையில், அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு மற்றும் குறைந்த மின்னழுத்தம் காரணமாக பயிர்கள் செழிப்பாக வள போதுமான தண்ணீரை பாய்ச்ச முடியாமல் பரிதவிப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்து உள்ளனர்.

குறைந்த மின்னழுத்தத்தில் (Low Voltage) மோட்டார்கள் இயங்கும் போது, அதிக சுமை ஏற்பட்டு காயில்கள் (Coils) கருகி கூடுதலாக தங்களுக்கு செலவு வைப்பதாகவும் கூறினர்.

இதனால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் கருகி தட்டையாகி விட்டன, இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்து உள்ளனர்.

இது குறித்து பேசிய விவசாயிகள் நன்கு வளர்ந்து வந்த நெற்கதிர்களுக்கு பாய்ச்ச போதுமான அளவு தண்ணீர் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று கூறினர்.

இதற்கு முக்கிய காரணம் போதிய அளவு மும்முனை மின்சாரம் தங்களுக்கு கிடைக்காததே என்று வருத்தம் தெரிவித்தனர். மின்வெட்டு உள்ளிட்ட பிரச்சனைகளால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், சேதத்தை கணக்கிட்டு அரசு தங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## அரசு மகளிர் விடியல் பேருந்தில் விடியல் நீக்கம்!

# இது மாற்றத்துக்கான ஆட்சியா? பெயர் மாற்ற ஆட்சியா?

### டி.கே.எஸ்.இளங்கோவன் கேள்வி!

சென்னை, ஜூலை 11 -

த.வெ.க. அரசு மகளிர் விடியல் பேருந்து பயணத்திலிருந்து விடியலை நீக்கியது தொடர்பாக தலைமைக் கழகச் செய்தித் தொடர்பு குழு தலைவர் டிகேஎஸ்.இளங்கோவன் அவர்களது பேட்டியில் இது மாற்றத்திற்கான ஆட்சியல்ல; வெறும் பெயர் மாற்றத்திற்கான ஆட்சி எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் விஜய் கரூர் செல்லக் கூடாது என எங்குமே தி.மு.க. கூறவில்லை. எங்கள் மனுவில் ஒரு வரி, ஒருவார்த்தை கூட அவ்வாறு இல்லை.



மாற்றத்திற்கான கட்சி என சொல்லிவிட்டு வெறும் பெயர் மாற்றத்திற்கான கட்சியாக ஆட்சிக்கு வந்துள்ளார்கள். திட்டங்களின் பெயரை மாற்றுவது மட்டுமே நோக்கமாக வைத்து செயல்பட்டு வருகிறார்கள். இவர்கள் அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றாததால் இன்று விவசாயிகள் வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

பலதரப்பட்ட மக்களும் அரசிற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது சமூக மாற்றத்திற்கான ஆட்சி அல்ல பெயர் மாற்றத்திற்கான ஆட்சி.

விடியல் பேருந்து பயணத்தில் விடியலை நீக்கி உள்ளனர், நான் முதல்வன் திட்டத்தின் பெயரை மாற்றி உள்ளனர். இப்போதுள்ள திட்டங்கள் எல்லாம் எங்களுடைய தலைவரால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள். அதன் பெயரை மட்டும் மாற்றி இவர்களுடைய திட்டம்போல காட்டிக்கொள்ளாம் என கருதுகிறார்களோ என்னவோ.

மேலும் முதல்வர் விஜய் கரூர் செல்வதை தி.மு.க. தடுக்கிறது என கூறினார். எங்களுடைய வழக்கில் எங்காவது முதல்வர் விஜய் கரூர் செல்ல கூடாது என இருக்கிறதா? அமைச்சர் ஆதவ் அர்ஜுனா எங்கள் மீது அபாண்டமான குற்றச் சாட்டை வைத்து பேசினார்.

'காவல்துறையை விட்டு கொன்று குவித்தனர்' என வீண் பழியை சுமத்தினார். அவர் பேச்சிற்கு எதிராகத் தான் நீதிமன்றம் சென்றோமே தவிர முதல்வர் விஜய் கரூருக்கு செல்ல கூடாது என ஒரு வரி, ஒரு வார்த்தை கூட எங்கள் மனுவில் இல்லை.

இவ்வாறு டி.கே.எஸ். இளங்கோவன் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பகுதி வாரியாக கழக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் வி.சி.சந்திரகுமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில் குமார், செல்லபொன்னி, ப.க.பழனிச்சாமி, பகுதிச் செயலாளர் வி.சி.நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தொடர் மழை வெள்ளத்தால் ஆற்றில் மிதந்து வந்த

# 3000 எரிவாயு சிலிண்டர்களை மக்கள் எடுத்துச் சென்று பயன்படுத்தவேண்டாம்!

### மராட்டியத்தில் - மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள்!

ராய்காட், ஜூலை 11 -

மகாராஷ்டிராவின் ராய்காட் பகுதியில் வெள்ளத்தில் எரிவாயு சிலிண்டர்கள் மிதந்து வந்த வீடியோ மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவற்றை வீடுகளுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்த வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழை காரணமாக, ஹெச்.பி.சி. எல். பாதாளகங்கா எல்.பி.ஜி. சிலிண்டர் நிரப்பும் ஆலையின் பாதுகாப்புச் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இதனால், வெள்ள நீர் நேரடியாக ஆலைக்குள் புகுந்தது.

இதன் விளைவாக, ஆலை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3,000 எரிவாயு சிலிண்டர்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு, பாதாளகங்கா ஆறு மற்றும் கர்பாடா ஓடையில் தத்தளித்தபடி மிதக்கத் தொடங்கின.

இந்த விநோதமான காட்சியை பாலத்தின் மீது நின்றபடி பொதுமக்கள் பலரும் தங்களது மொபைல் போன்களில் ஆச்சரியத்துடன் வீடியோவாகப் பதிவு செய்து சமூகவலைதளங்களில் வெளியிட்டதால், பொதுமக்கள் மத்தியில் ஆர்வம் அதிகமானது.

இதையடுத்து, ராய்காட் மாவட்ட ஆட்சியர் கிஷன் ஜாவ்லே கூறுகையில், "ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட இந்த சிலிண்டர்கள் சிலவற்றில் எரிவாயு நிரப்பப்பட்டிருக்கலாம். பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே, பொதுமக்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்த முயற்சிக்க வேண்டாம். மீட்கப்படும் எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ அல்லதுநிறுவனத்திடமோ ஒப்படைக்க வேண்டும்.

இந்த சிலிண்டர்களை நேரடியாக ஹெச்.பி.சி. எல். நிறுவன வளாகம், அருகில் உள்ள ஹெச்.பி. சி.எல். விநியோகஸ்தர், கிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகம், பிற வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்" என்றார்.